மாவட்டத்தில் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை போட்டு அனுப்பி இருக்கிறார்கள். அதை அரசு கவனத்தில் கொண்டு வருகின்ற காலத்திலாவது திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தை பசும்பொன் மாவட்டத்தோடு சேர்த்து அம்மக்களுடைய குறைகளை நீக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானம்.

### விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

‘‘ ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 10–3–1987 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை அன்று தளர்த்த வேண்டும்.’’

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, செவ்வாய்க் கிழமை (10–3–1987) அன்று காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

24. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு முத்திரைத் தாள் (கருவிகளை குறைத்து மதிப்பிடுவதை தடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 21–11–1986 ஆம் நாளிட்ட 1192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1899) 75-ஏ (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS